பெறுகிறார்கள். மத்திய அரசால் மாநில அரசுக்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தக் கடன் தொகைக்கு $5\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும். மத்திய அரசு உலக வங்கி நிதி உதவி வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரவேண்டும் அல்லது ஒரே மாதிரியாக கவனிக்க வேண்டும் என்பதற்காக $5\frac{1}{2}$ சதவிகிதம் என்று பொதுவாகப் போட்டு எல்லா மாநிலங்களுக்கும் தருகிற முறையைத்தான், மத்திய அரசு கையாண்டு வருகிறது. உலக வங்கிக்கு இம்மாநில அரசு நேரடியாக எந்தவித வட்டியும் செலுத்துவது இல்லை.

(இ) சுகாதாரப் பணிகளைப் பொறுத்தவரையில் உலக வங்கியின் நிபந்தனைகள் ஏதும் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சுகாதாரப் பணிகளுக்காகத் தான் இந்தப் பணத்தை உலக வங்கியிடம் கடன் வாங்கி இது நடத்தப்படுகின்றது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இந்த சுகாதாரப் பணிகளை குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட பகுதிகளில் சரியான முறையில் நடைபெறாத பெருங்குறை இருந்து வருகிறது. மாநகராட்சி, நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அப்படிப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியக் கட்டிடத்தை, வீடுகளை கட்டியுள்ள இடங்களில் அந்த முனிசிபாலிடிக்கே, மாநகராட்சிக்கே அந்தச் சுகாதாரப் பணிகளைக் கவனிக்கும்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படியானால், இவைகளை கவனிப்பதற்கான ஆட்கள் அவர்கள் கையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதைச் செய்வதற்கு அரசு முன்வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுவதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, வேறு தகவல் கிடைத்திருந்தால், எங்கெங்கே அப்படிச் சிறப்பாக நடைபெறவில்லை என்கிற தகவலைக் கொடுப்பார்களானால், அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

சென்னை பெருநகர் திட்டம்.

*வினா எண் 597—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை சுற்றி அமைக்கப்பட இருந்த பெருநகர திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நகர்கள் அமைக்க அரசு கருதியிருக்கிறது?

1982 மார்ச் 22]

மாண்புமிகு திரு. என். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) முழுமை திட்டத்தின்படி ஆறு புறநகர் திட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. அவைகள் முறையே :—

(1) மணலி,

(2) மீஞ்சூர்,

(3) ஆவடி,

(4) அம்பத்தூர்,

(5) ஆலந்தூர் மற்றும்

(6) பல்லாவரம்.

தற்பொழுது மணலி புறநகர் மட்டுமே அரசு சார்ந்த முதலீட்டுடன் அமைக்கப்பட்டு வருகிறது. மற்ற ஐந்து புறநகர் திட்டப் பகுதிகளில் தனிப்பட்டவர்கள் முதலீட்டுடன் அமைக்கப்படும் வளர்ச்சிப் பணிகள் உரிய திட்ட விதிகளின்படி கட்டுப்படுத்தப் பட்டு, சீராக அமையும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

சென்னை நகரில் தனியார்களால் கட்டப்படும் பலமாடிக் கட்டிடங்களைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண். 598— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நல்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல மாடிக் கட்டிடங்களை கட்டும் தனியார்களை தடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை பெருநகர்க்குரிய முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 2395-ன் படியும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசு ஆணை எண். 1764, தேதி : 6—9—1979-ன் படியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில்தான் பல மாடிக்கட்டிடங்கள் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்ட அனுமதிக்கப்பட்டது.